# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

**அனுப்புநர்**

மரு.மா. இளங்கோவன், பி.வி.எஸ்சி.,
ஆணையாளர்,
ஈரோடு மாநகராட்சி,
ஈரோடு.

**பெறுநர்**

மாண்பமை மாவட்ட முதன்மை நீதிபதி அவர்கள்,
மாவட்ட முதன்மை நீதிமன்றம்,
ஈரோடு மாவட்டம்.

DISTRICT COURT Received 06 OCT 2021 9359 ERODE UNIT ERODE

ந.க.எண். இ2/3624/2021 நாள்: 06.10.2021.

அய்யா,

பொருள் : பெயர் மாற்றம் - ஈரோடு மாநகராட்சி- ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு எதிரில் உள்ள சம்பத் நகர் பிரதான சாலையில் தியாகி குமரன் சாலை என மாற்றம் செய்யப்பட்டுள்ளது விபரம் தெரிவித்தல் - தொடர்பாக

பார்வை : அரசாணை (4ப) எண். 04 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை நாள். 03.10.2021

* * * * *

பார்வையில் கண்டுள்ள அரசாணையில் ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு எதிரில் உள்ள சம்பத் நகர் பிரதான சாலையினை தியாகி குமரன் சாலை என மாற்றம் செய்ய அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி சம்பத் நகர் சாலைக்கு **"தியாகி குமரன் சாலை சம்பத் நகர்"** என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள விபரத்தினை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஆணையருக்காக,
ஈரோடு மாநகராட்சி

இணைப்பு

அரசாணை நகல்

## சுருக்கம்

ஈரோடு மாநகராட்சி – ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், ஈரோடு "அ" கிராமத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு எதிரில் உள்ள சம்பத் நகர் பிரதான சாலையின் பெயரை "தியாகி குமரன் சாலை, சம்பத் நகர்" என பெயர் சூட்டுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை

அரசாணை (4ப) எண்.04

நாள்.03.10.2021
திருவள்ளுவர் ஆண்டு, 2052
பிலவ வருடம், புரட்டாசி 17

E2/
BM

படிக்கப்பட்டது:

1. ஈரோடு மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.114, நாள்:12.08.2021.
2. ஆணையர், ஈரோடு மாநகராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.இ2/ 3624/2021, நாள்:24.09.2021.
3. ஈரோடு மாவட்ட ஆட்சியரின் ந.க.எண்.19846/2021/கே4, நாள்:22.09.2021.
4. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித ந.க.எண்.23151 / 2021/டிபி2, நாள்:29.09.2021.

*******

**ஆணை:**

மேலே 4–இல் படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதத்தில் ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், ஈரோடு "அ" கிராமத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு எதிரில் உள்ள சம்பத் நகர் பிரதான சாலையின் பெயரை "தியாகி குமரன் சாலை, சம்பத் நகர்" என பெயர் மாற்றம் செய்ய கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேற்காணும் பொருள் தொடர்பாக மேலே 2–இல் படிக்கப்பட்ட கடிதத்தில் ஈரோடு மாநகராட்சி ஆணையர் பின்வரும் விவரங்களைத் தெரிவித்துள்ளார்:–

(i) மாண்புமிகு வீட்டு வசதி துறை அமைச்சர் அவர்களின் 10.08.2021–ஆம் நாளிட்ட கடிதத்தில் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு எதிரில் உள்ள சம்பத் நகர் பிரதான சாலைக்கு சுதந்திர போராட்ட வீரர் தியாகி குமரன் அவர்களின் நினைவாக தியாகி குமரன் சாலை என பெயரை சூட்ட வேண்டும் என்றும், மேலும் அச்சாலையின் பெயர் பலகை தியாகி குமரன் சாலை சம்பத் நகர் என்ற வகையில் அமைக்குமாறும் தெரிவித்துள்ளார்.

(ii) இதனைத் தொடர்ந்து ஈரோடு மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.114 நாள்:12.08.2021–ல் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு எதிரில் உள்ள சம்பத் நகர் பிரதான சாலைக்கு "தியாகி குமரன் சாலை, சம்பத்

நகர்" என பெயர் மாற்றம் செய்ய ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் வழியாக அரசின் அனுமதி பெற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

(iii) எனவே, மேற்காணும் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு எதிரில் உள்ள சம்பத் நகர் பிரதான சாலைக்கு "தியாகி குமரன் சாலை, சம்பத் நகர்" என பெயர் மாற்றம் செய்வதற்கு அரசின் அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. இதனைத் தொடர்ந்து, மேலே 3-ல் படிக்கப்பட்ட கடிதத்தில் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் பின்வரும் விவரங்களைத் தெரிவித்துள்ளார்:-

(i) ஈரோடு மாவட்டத்திலுள்ள சென்னிமலையில் 1904-ம் ஆண்டு நாச்சிமுத்து (ம) கருப்பாயி ஆகியோருக்கு மகனாக திருப்பூர் குமரன் என்று அழைக்கப்படும் திரு.குமாரசாமி பிறந்தார் எனவும், திருப்பூரில் 1932-ம் ஆண்டு நடைபெற்ற சுதந்திர போராட்டத்தில் பங்கேற்று தேசத்திற்காக தன் உயிரை துறந்தார் எனவும், எனவே அவரை பெருமைப்படுத்தும் விதமாக மேற்படி சம்பத் நகர் பிரதான சாலையின் பெயரை தியாகி குமரன் சாலை என மாற்றம் செய்ய கோரியதன் பேரில் பொதுமக்களிடம் கருத்துரு கோரப்பட்டத்தில் பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனை ஏதும் வரப்பெறவில்லை.

(ii) மேலும், ஈரோடு வடக்கு காவல் நிலைய சரகத்திற்குள் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு எதிரில் உள்ள சம்பத் நகர் பிரதான சாலையின் பெயரை "தியாகி குமரன் சாலை, சம்பத் நகர்" என பெயர் வைத்து நடைமுறைப்படுத்துவது தொடர்பாக சம்பத் நகர் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள், வியாபாரிகள் ஆகியோரிடம் கருத்துருக்கள் பெற்றதில், அப்பகுதி மக்கள் எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை எனவும், எனவே மேற்படி சம்பத் நகர் பிரதான சாலையினை "தியாகி குமரன் சாலை, சம்பத் நகர்" என பெயர் வைத்திட காவல் துறை நோக்கில் ஆட்சேபனை ஏதும் இல்லை என ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

4. எனவே, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு எதிரில் உள்ள சம்பத் நகர் பிரதான சாலையின் பெயரை தியாகி குமரன் சாலை, சம்பத் நகர் என பெயர் மாற்றம் செய்ய அனுமதி வழங்குமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அரசைக் கோரியுள்ளார்.

5. மேலும், ஈரோடு மாநகராட்சி ஆணையர் மற்றும் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோரின் கருத்துருக்களின் மீது உரிய ஆணை வேண்டி அக்கருத்துருக்களை நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்து மேலனுப்பியுள்ளார்.

6. நகராட்சிக்குட்பட்ட சாலைகள், பேருந்து நிலையங்கள் போன்றவற்றிற்கு பெயர் மாற்றுதல், பெயரிடுதல் போன்ற செயற்குறிப்புகள் பரிசீலிக்கப்பட்டு இவ்வாறு பெயர் வைப்பதில் பல பிரச்சனைகள் உருவாகின்ற காரணத்தால் ஏற்கெனவே வழங்கப்பட்ட அறிவுரைகள் வலியுறுத்தப்படுவதுடன், மாநகராட்சிகள் உட்பட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் புதிதாக பெயர் வைப்பது ஏற்கெனவே உள்ள பெயரை மாற்றுவது குறித்த தீர்மானங்களை இயற்றி

அரசுக்கு அனுப்புவதை தவிர்க்கும்படி அரசாணை (ப) எண்.372, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:30.07.1997 மற்றும் அரசாணை (நிலை) எண்.113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:30.06.1998–ல் ஆணையிடப்பட்டுள்ளது. மேற்காணும் அரசாணையை உறுதி செய்து அரசாணை (ப) எண்.573, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5) துறை, நாள் 14.12.2001–ல் மீண்டும் ஆணையிடப்பட்டுள்ளது.

7. மேற்காணும் சூழ்நிலையில், திருப்பூரில் 1932–ம் ஆண்டு நடைபெற்ற சுதந்திர போராட்டத்தில் பங்கேற்று தேசத்திற்காக தன் இன்னுயிரை துறந்த திருப்பூர் குமரன் அவர்களைப் பெருமைப்படுத்தும் விதமாக, மேலே பத்தி 6–ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைகளிலிருந்து விலக்களித்து, இந்நேர்வினை சிறப்பினமாகக் கருதி, 04.10.2021 அன்று கொடிகாத்த குமரன் என்று அழைக்கப்படும் தியாகி திருப்பூர் குமரன் அவர்களின் பிறந்த நாளை சிறப்பிக்கும் பொருட்டு, ஈரோடு மாநகராட்சி எல்லைக்குட்பட்ட ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், ஈரோடு "அ" கிராமத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு எதிரில் உள்ள சம்பத் நகர் பிரதான சாலைக்கு "தியாகி குமரன் சாலை, சம்பத் நகர்" என்று பெயர் சூட்டி அரசு ஆணையிடுகிறது.

**// ஆளுநரின் ஆணைப்படி //**

**சிவ் தாஸ் மீனா,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்:**
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –600 028.
மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு மாவட்டம்.
ஆணையர், ஈரோடு மாநகராட்சி, ஈரோடு.
செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை –600 009.
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்குநரகம், எழும்பூர், சென்னை –600 008.
**நகல்:**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை –600 009.
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தலைமைச் செயலகம்,
சென்னை –600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை,
தலைமைச் செயலகம் , சென்னை – 600 009.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

சா. [illegible]
3/10/21
**பிரிவு அலுவலர்.**

Endt. with R. No.9359 dated: 06.10.2021     D.No.7611 /2021, dated: 07.10.2021.

Copy communicated to all the Judicial Officers in Civil and Criminal Units of this District for information.

Principal District Court, Erode
07.10.2021

//By Order //

R. [signature] 7/10/2021
Chief Administrative Officer,
Principal District Court,
Erode.

**To:**

All the Judicial Officers (Both Civil and Criminal Units) in respect of Erode District.

**Copy to :**

The System Analyst, Principal District Court, Erode.